# பயறு வகைகளுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, பயறு வகைகளுக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

**உளுந்து**

இந்தியாவின் மொத்த பயறு உற்பத்தியில், உளுந்து 29 சதவீதம் பங்களிக்கின்றது. மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், உத்திர பிரதேசம், மஹாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை உளுந்து அதிக அளவில் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த உளுந்து உற்பத்தியில் 71 சதவீதம் பங்களிகின்றன. வேளாண் அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2022-23 ஆம் ஆண்டின் உற்பத்தி 26.82 இலட்சம் டன்கள் மட்டுமே என்று எதிர்பார்க்கபடுகிறது (இலக்கு 37 இலட்சம் டன்கள்)

உலகிலேயே பருப்பு வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் முக்கிய இறக்குமதியாளராக இந்தியா இருப்பதால், பல ஏற்றுமதி நாடுகள் தங்கள் பருப்பு வகைகளை சந்தைப்படுத்த இந்தியாவைச் சார்ந்துள்ளன. மியான்மர், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய பகுதிகளிலிருந்து உளுந்தை இந்தியா அதிகளவு இறக்குமதி செய்கிறது. மேலும், உலகின் மூன்றாவது பெரிய இறக்குமதியாளராக இந்தியா உள்ளது. கடந்த ஆண்டு கையெழுத்தான இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ், 2021-22 மற்றும் 2025-26 க்கு இடையில் மியான்மரில் இருந்து ஆண்டுதோறும் 2.5 இலட்சம் டன்கள் உளுந்து இறக்குமதி செய்ய இந்தியா உறுதியளித்துள்ளது.

உளுந்து உற்பத்தி செய்யும்  மாநிலங்களில் தமிழ்நாடு முக்கியமான மாநிலமாகும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 இலட்சம் எக்டர் பரப்பளவில் உளுந்து பயிரிடப்பட்டு 2.25 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யபடுகிறது. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகியவை உளுந்து உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். ஏ.டி.டீ 3, ஏ.டி.டீ 4,  ஏ.டி.டீ 5, கே.கே.எம் 1, கோ 6, வம்பன் 5, வம்பன் 6 ஆகிய உளுந்து இரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் உளுந்து மார்ச் முதல் ஏப்ரல் வரை அதிகளவில் அறுவடை செய்யப்படுகிறது.

வர்த்தக மூலங்களின் படி, உளுந்து வரத்தனது ஆந்திர பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏற்கனவே வர தொடங்கியுள்ளது, மேலும் மார்ச்'23 இரண்டாவது வாரத்திலிருந்து தமிழ் நாட்டிலிருந்து புதிய  வரத்து வர தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

**பச்சைப் பயறு**

வேளாண் அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2022-23 ஆம் ஆண்டின் பச்சைப் பயறு  உற்பத்தி 35.45  இலட்சம் டன்கள் மட்டுமே என்று எதிர்பார்க்கபடுகிறது (இலக்கு 40 இலட்சம் டன்கள்).  இராஜஸ்தான்,  மஹாராஷ்டிரா, ஒரிசா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு மற்றும் உத்திர பிரதேசம் ஆகியவை பச்சைப் பயறு அதிக அளவில் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழ் நாட்டில், பச்சைப் பயறு  ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.60 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.58 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யபடுகிறது.  நாகப்பட்டினம், திருவாரூர், திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை பச்சைப் பயறு  உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். ஏ.டி.டீ 3 மற்றும் வம்பன் 3 போன்ற இரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய உளுந்து மற்றும் பச்சைப் பயறுக்கான விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், ஏப்ரல் - மே'2023 வரை தரமான உளுந்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.69 முதல் 72 வரை இருக்கும் மற்றும் தரமான பச்சைப் பயறுகளின் பண்ணை விலை ரூ.68 முதல் ரூ.70 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அரசு நேரடி கொள்முதல் செய்வதன் மூலம் பருப்பு வகைகளின் விலையில் சற்று மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405

2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
   தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்
   நீர் தொழில்நுட்ப மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசியார் மற்றும் தலைவர்
பயறு வகை துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-2450498

## Price Forecast for Pulses

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for blackgram and greengram.

### Blackgram

Blackgram accounts for about 29 per cent of India's total pulses production and largely cultivated in Madhya Pradesh, Andhra Pradesh, Uttar Pradesh, Maharastra and Tamil Nadu. These states together contribute for 71 per cent of total blackgram production in the country According to the Ministry of Agriculture and Farmer Welfare for year 2022-23, blackgram production is lower than the target. (26.82 lakh tonnes as against 37 lakh tonnes).

Many exporting countries are dependent on India for marketing their pulses as India is the largest producer, consumer and major importers of pulses in the world. India imports most of its blackgram from Myanmar, China and Unites States and is the third largest importer of blackgram in the World. Under the bilateral agreement signed last year, India has committed to import 2.5 lakh tonnes blackgram annually from Myanmar between 2021-22 and 2025-26.

Tamil Nadu is one of the major blackgram growing states of the country accounting for 4 lakh hectares with a production of 2.25 lakh tonnes annually. Cuddalore, Nagapattinam, Viluppuram, Thanjavur and Tiruvarur are the major districts cultivating blackgram. Major cultivars are ADT 3, ADT 4, ADT 5, KKM 1, CO 6, VBN (Bg) 5 and VBN 6.Tamil Nadu reports, peak harvesting period of blackgram from March to April.

According to the trade sources, blackgram arrivals from Andhra Pradesh and Madhya Pradesh have already started and it is expected that new arrivals from Tamil Nadu will commence from the second week of March’23 onwards.

**Greengram**

According to the Second Advance Estimates of Ministry of Agriculture and Farmer Welfare for year 2022-23, Greengram production is lower than the target (35.45 lakh tonnes as against 40 lakh tonnes). In India, major greengram producing states are Rajasthan, Maharashtra, Orisha, Karnataka, Andhra Pradesh, Tamil Nadu and Uttar Pradesh.

In Tamil Nadu, greengram is cultivated in an area of 1.60 lakhs hectare with production of 0.58 lakhs tonnes annually. Greengram is grown in Nagapatinam, Thiruvarur, Thiruvallur, Thoothukudi and Salem. ADT 3 and VBN (Gg) 3 are the major cultivated varieties in Tamil Nadu.

The Price Forecasting team has analyzed the last 15 years of blackgram and greengram prices prevailed in Viluppuram Regulated market. The result of the econometric analysis revealed that the farm gate price of the good quality blackgram would revolve around Rs. 69-72 per kg and greengram around Rs.68-70 per kg during harvest (April to May 23). The price may subject to change according to the recent government initiative taken in procuring pulses directly from farmers.

***For further details contact***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact**:*

*Professor and Head*
*Department of Pulses*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-2450498*